IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

**M.C. 2/2023 Date : . 27.01.2026 R.W.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிகண்டன் | ஆதார் எண் | |
| தந்தை பெயர்: | ராசுகண்ணு | தொழில் | கொத்தனார் |
| கிராமம் | பாலகொல்லை | வயது | 53 |
| மனுதாரர் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர் . | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை..**

1. எனக்கும் மனுதாரருக்கும் கடந்த 25.03.2007 ம் தேதி திருச்சி சமயபுரம் மாரியம்மன் கோவிலில் இந்து சாஷ்திர முறைபடியும் சம்பிராதாய படியும் திருமணம் நடந்தது என்றால் சரிதான். திருமணத்தின் போது எனது தரப்பில் நானும், மனுதாரர் தரப்பில் அவரது பெற்றோர்களும் உறவினர்களும் இருந்தார்கள் . திருமணத்திற்கு பிறகு மனுதாரரும் நானும், உளுந்தூர்பேட்டையில் உள்ள எனது சகோதரி கனகராணி வீட்டில் 1 மாதம் குடும்பம் செய்தோம்.

2. பின்னர் 1 மாதம் உளுந்தூர்பேட்டையில் வீடு வாடகைக்கு எடுத்து 8 மாதங்கள் குடும்பம் நடத்தினோம். நாங்கள் நல்ல முறையில் குடும்பம் நடத்தியதில் 12.04.2008 அன்று மணிவலவன் என்கிற ஆண்குழந்தை பிறந்தது. பின்னர் எனது சொந்த கிராமமான பாலகொல்லைக்கு சென்றுவிட்டோம். நாங்கள் நல்ல முறையில் குடும்பம் நடத்தியதில் 12.08.2009 அன்று மணிபிரியன் என்கிற ஆண்குழந்தை பிறந்தது என்றால் சரிதான்.

3. 2 வது ஆண்குழந்தை பிறந்து 11 வயதாகும் வரை எங்களுக்குள் எந்த கருத்துவேறுபாடும் இல்லை என்றால் சரிதான். எங்களுக்குள் எப்போது முதன் முதலில் கருத்துவேறுபாடு ஏற்பட்டது என்றால் 2014 ம் வருடம். கருத்துவேறுபாடு சம்மந்தமாக மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். அதன் பிறகு மனுதாரர் உடன் சேர்ந்து வாழ எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் நானும் எனது தாயாரும் , தம்பி, தம்பி மனைவி ஆகியோர் ஒன்று சேர்ந்து சென்று மனுதாரரை அழைத்து வர தாய்வீட்டிற்கு சென்றோம்.

4. மேற்படி விவரத்தினை நான் எனது ஆட்சேபனையில் கூறியுள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். 30.10.2019 அன்று நான் மனுதாரர் வீடான ஆசனூர் கிராமம் சென்று மனுதாரரை அழைத்த போது தகராறு ஏற்பட்டு நான் மனுதாரரை தாக்கியதாக உளுந்தூர்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அது சம்மந்தமாக போலிசார் இருதரப்பினரையும் விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

5. நான் மனுதாரரை தாக்கியதில் மனுதாரர் தலையில் தையல் போடப்பட்டதா என்றால் மனுதாரரின் தலையில் காயம் ஏற்பட்டது தையல் போடப்பட்டதா என்று தெரியாது. நான் கொத்தனார் வேலை செய்துவருகிறேன் என்றால் சரிதான். உளுந்தூர்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அழைத்து விசாரித்த பிறகு மனுதாரருடன் சேர்ந்து வாழ நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. சேந்தநாடு சாலையில் என்னை 4 நபர்கள் தாக்கியதாகவும் அதில் நான் காயம் அடைந்ததாகவும் மேற்படி சம்பவம் தொடர்பாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். ஆனால் மேற்படி ஆவணம் தொடர்பாக நான் திருநவாலூர காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. உளுந்தூர்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். இது சம்மந்தமா போலிசார் விசாரித்து நடவடிக்கை எடுத்தார்களா என்றால் விசாரித்தார்கள் ஆனால் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

7. 24.02.2023 அன்று உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையத்தில் நான் இருந்த போது வெங்கடேசன் என்பவரும் எனது மனைவியும் சேர்ந்து என்னை தாக்கியதாக நான் உளுந்தூர்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதில் போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் என்னையும் என் மனைவியையும் விசாரித்தார்கள் மற்ற நபர்களை விசாரிக்கவில்லை. இது சம்மந்தமாக போலிசார் விசாரித்து மேல் நடவடிக்கை எடுத்தார்களா என்றால் CSR பதிவு செய்தார்கள் மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

8. 21.02.2023 அன்று உளுந்தூர்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வெங்கடேசன் ஆசனூர் காலனி என்பவர் மீது நான் புகார் கொடுத்து CSR 100/2023 பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இது சம்மந்தமாக போலிசார் விசாரித்து மேல் நடவடிக்கை எடுத்தார்களா என்றால் CSR பதிவு செய்தார்கள் மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

9. 04.07.2007 அன்று நான் என் மனைவி பெயரில் நிலம் வாங்கியதாக ஒரு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் அந்த நிலத்தை நான் தான் மனுதாரருக்கு வாங்கி கொடுத்தேன் என்றால் சரிதான். பத்திரத்தில் நான் தான் மனுதாரருக்கு வாங்கி கொடுத்ததாக இல்லை என்றால் சரியல்ல. மனுதாரரின் தகப்பனார் மும்பையில் இரயில்வேயில் பணி செய்தார் என்றால் சரிதான்.

10. மேற்படி இடத்தினை மனுதாரரின் தகப்பனார் தான் மனுதாரரின் பெயரில் வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்து வழக்கிற்காக பொய்யாக தயாரித்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. CSR பதிவுசெய்தது உண்மையானதாக இருப்பின் போலிசார் நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல.

11. நான் எனது முதல் விசாரணையில் தாக்கல் செய்துள்ள CD ஆவணத்தை வழக்கிற்காக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கொத்தனார் வேலை மற்றும் இதர வேலைகள் மூலம் மாதம் 30, 000 ரூபாய் சம்பாதிக்கிறேன் என்றால் சரியல்ல. 1 ம் மனுதாரருக்கு மற்றும் 2 ம் மனுதாரருக்கும் உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றிற்கு தலா ரூ- 8,000/- கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

12. ஜீவனாம்ச தொகை தருவதை தவிற்பதற்காக பொய்யான அம்சங்களை கொண்டு ஆட்சேபனை மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2014 ம் வருடம் முதல் இன்று வரை எனது மனைவி மற்றும் குழந்தைகளை நான் பராமறிக்கவில்லை என்றால் சரியல்ல 2019 ம் வருடம் வரை நான் பராமரித்து வந்தேன். 2014 ம் வருடம் முதல் இன்று வரை எனது மனைவி மற்றும் குழந்தைகளை நான் பராமறிக்கவில்லை என்பதால் நான் ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல .

மறுவிசாரணை - இல்லை.

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

V GOMATHI

Digitally signed by V GOMATHI
Date: 2026.01.27 19:43:48 +0600

Judicial Magistrate-I,
Ulundurpet.

Typed by E.veeramani